## இலங்கை கிரிக்கெட - 2021

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிரிக்கெட்டின் ("இலங்கை கிரிக்கெட்") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து இலங்கை கிரிக்கெட்டின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 மற்றும் 2015 ஆம் வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 47,438,675 பெறுமதியான நான்கு செயற்திட்டங்களுக்கான நிர்மாணப்பணிகள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததடன் குறிப்பிட்ட உள்ளுராட்சி மன்றங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் | மீளாய்வாண்டில் முடிக்கப்படாத நான்கு வெவ்வேறு செயற்திட்டங்களை இது குறிக்கின்றது. எனவே நியமிக்கப்பட்ட நிபுணத்துவ தொழில்நுட்பக் குழுவின் இறுதிப் பரிந்துரையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கையை முடிக்கும் வரை | இணங்காமைகளை திருத்திக் கொள்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட வேண்டியிருந்தன. இருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி ரூபா 47,438,675 ஆனது தேவையான சீராக்கங்கள் செய்யப்படாது நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எனவே மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 47,438,675 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மூலதன நடைமுறை வேலையில் மொத்த மீதி காட்டப்படுகின்றது.<br><br>செயற்திட்டங்களின் தேறிய பெறுமதியை அறவிடுவதற்கு நாம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். | |
| (ஆ) | இலங்கை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பதற்காக தேவையான செலவுகளை நேரடியாகச் செய்வதன் மூலம் மற்றும் பிராந்திய சங்கங்களுக்கு மானியங்களை வழங்குவதன் மூலம் இலங்கை கிரிக்கெட் ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதும் கிரிகெட் மைதான அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இருந்த போதிலும், அந்த கிரிகெட் மைதான அபிவிருத்திச் செலவுகளை கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டுக் கொள்கையொன்று இலங்கை கிரிக்கெட்டால் அறிமுகப்படுத்தப்படவில்லை. இதனால் இலங்கை கிரிக்கெட்டால் நேரடியாக நடாத்தப்பட்ட ஒன்பது செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிர்மாண முற்பணம் ரூபா 93,553,954 மற்றும் ஆறு நிர்மாணச் செயற்திட்டங்களுக்காக கிரிக்கெட் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மானியங்கள் ரூபா 89,828,319 ஆகிய அம் முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் மூலதன நடைமுறை வேலைகள் மற்றும் மானியங்களாக தனித்தனியே காட்டப்படுவதற்குப் பதிலாக முற்பணங்களாக காட்டப்பட்டிருந்தன | விளையாட்டுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்களை நிதிக்கூற்றுக்களில் தனிப்பட்ட மீதியாக நாம் வெளிப்படுத்தாமைக்கு காரணம் இது ஒரு கட்டாய அறிக்கையிடல் தேவை அல்ல என்பதனால் ஆகும். இருப்பினும் அபிப்பிராயத்தின் பிரகாரம் இதை எமது ஆலோசகர்கள் மற்றும் நிதி ஆலோசனைக் குழுவிற்குச் சமர்ப்பித்து அதன் பிரகாரம் செயற்படுவோம். | நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மற்றும் சீராக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மற்றும் பெற வேண்டிய பெறுமதி சேர் வரி என்பவற்றின் கூட்டுத்தொகை முறையே ரூபா 38,229,740 மற்றும் ரூபா 261,376,152 என்பன அறவிடப்படாது அல்லது நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படாது 2 தொடக்கம் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | நிறுத்தி வைத்தல் வரி பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம். | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்து பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கம்பனியிடமிருந்து பெற வேண்டிய அனுசரணைகளின் மொத்தம் ரூபா 2,222,800 ஆனது அறவிடப்படாது அல்லது நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்படாது 03 வருடங்களுக்கும் மேலாக காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | 2021 ஆம் வருடத்தில் ரூபா 61,600 தீர்க்கப்பட்டுள்ளதுடன் இம்தியாஸ் என்பவருக்கு செலுத்த வேண்டிய மீதியிலிருந்து கடன்பட்டோரை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>நேரடி உறுதிப்படுத்தல் கோரிக்கைக் கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அந்தந்த அனுசரனையாளர்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மேலும் துல்லியமாக இருப்பதற்காக உறுதிப்படுத்தலில் பின்வரும் உட்பிரிவைச் சேர்த்துள்ளோம். குறிப்பிட்ட உட்பிரிவு ‘‘இக் கடிதத்திற்கான பதிலை இத் | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களைச் செய்து பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பெறாவிட்டால் இங்கு குறிப்பிட்டுள்ள மீதி சரியானது என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டதாக கருதப்படும்.'' என்பதாகும். | |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தெற்காசியச் சுற்றுலாவுடன் தொடர்பான ரூபா 37,557,263 (ஐ.அ.டொலர் 187,085) பெறுமதியான அனுசரணை உரிமைகளுக்காகப் பெற வேண்டிய வருமானம், அந்த அனுசரணைக் கம்பனியிடமிருந்து பெற வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சந்தேகத்திற்கிடமான மற்றும் முறையற்ற தலையீடுகள் மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களில் தாக்கமளித்திருந்தமையால் அனுசரணையாளர்களிடமிருந்து மேற்குறிப்பிடப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொள்வது நிச்சயமற்றதாக உள்ளது. | 2018 ஆம் வருடத்திற்கான தென் ஆபிரிக்க சுற்றுப் பயணத்திற்கான சர்வதேச தொலைக்காட்சி, வானொலி, மொபைல், இணையம் மற்றும் அனுசரணை உரிமைகளின் இறுதிக் கட்டணமாக (15%) Sony Pictures Network India (Pvt) Ltd இடமிருந்து 2018 ஆகஸ்ட் 01 இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 187,084.75 ஆனது இதில் அடங்கும். அறிக்கையிடல் திகதியில் இது இலங்கை கிரிக்கெட்டினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், இலங்கை கிரிக்கெட்டிற்கு இத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாக வழங்குநர் கோரிக்கை விடுத்துள்ளார். விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஒரு நீதிமன்ற வழக்கும் (வழக்கு இலக்கம் B/657/01/18) கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதுடன் நிதிக் கூற்றுக்கள் திகதியின் போது அது முடிக்கப்பட்டிருக்க | பெற வேண்டிய மீதிகளை கால தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வில்லை. பெறப்பட்ட சட்ட அபிப்பிராயத்தின் அடிப்படையில், தொகை அறவிடப்படுமென முகாமைத்துவம் கருதுகின்றது. இருப்பினும், கணக்கீட்டு நியமங்கள் காலக்கழிவு ஒதுக்கங்களின் பிரகாரம் குறிப்பிட்ட அபாயத்தைக் குறைப்பதற்கு அங்கீகரிக்கப் பட்டுள்ளது. | |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 12,794,805 ஆன திரண்ட வைப்புக்கள் அறவிடப்படாது அல்லது நிலுவைகளை மதிப்பீட்டு தேவையான சீராக்கங்கள் செய்யப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | மேற்படி நிலுவைகளை அறவிடுவதற்கு / உறுதிப்படுத்துவதற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலங்கை கிரிக்கெட்டினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற சேவைகளுக்காக செலுத்தப்பட்ட வைப்புத் தொகை தொடர்பாக உறுதிப்படுத்தல் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. மொத்தப் பட்டியலில் உள்ள விடயங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோது குறிப்பிட்ட பணிகள் அல்லது 18 விடயங்களுக்கான நிறைவு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்காகச் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் பணத்தை மீளப் பெறுவதற்கான கோரிக்கைக் கடிதம் அனுப்பட்டுள்ளது. | வைப்புத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,478,605,198 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 2,709,452,864 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 230,847,666 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. செலவுகள் ரூபா 1,487,919,565 ஆல் அதிகரித்தமையே அந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையிலுள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானங்களின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் தம்புள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் குளம் அமைக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் முடிவு செய்துள்ளது. 2018 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியில் இச் செயற் திட்டத்திற்காக ரூபா 58,304,528 செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த திகதியான 2019 திசெம்பர் 18 இலிருந்து 6 மாதங்களுக்குள் இச் செயற்திட்டத்தை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இச் செயற்திட்டம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் மற்றும் குறிப்பிட்ட பிரமாணங்களின் (அதாவது ICTA, CIDA) பிரகாரம் உரிய செயன்முறைகளைப் பின்பற்றி செயற்திட்டத்தை முடிப்பதற்கு எமது செயற்திட்டக்குழு செயற்படுகின்றது. கொவிட் 19 சூழ் நிலைகள் மற்றும் வெள்ளம் போன்ற மனித கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் அல்லது செயற்பாடுகள் காரணமாக இச் செயற்திட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது.<br><br>செயற்திட்ட முகாமையாளர்/ செயற்திட்ட ஆலோசகரால் சான்றுப்படுத்தப்பட்ட சேய்வேலைகளின் அடிப்படையில் முற்பணம் அறவிடப்படுகின்றது. ஒப்பந்தம் மற்றும் குறிப்பிட்ட பிரமாணங்களின் | நிர்மாணப் பணிகளை முடிந்தளவு விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (அதாவது ICTA, CIDA) பிரகாரம் செயற்திட்ட முகாமையாளரால் EOT அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்ததால் செயற்திட்டத்தை முடிப்பதில் தாமதமில்லை.<br><br>திருத்தப்பட்ட செயற்திட்டததின் பிரகாரம் மிகுதி முற்பணம் அறவிடப்படும். | |
| (ஆ) | மாவட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான கிரிக்கெட் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஹெட்டிபொல மைதான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் , 2018 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதியில் இச்செயற்திட்டத்திற்காக ரூபா 32,067,363 செலவிடப்பட்டுள்ளது. மேற்படி நிர்மாணச் செயற்திட்டம் 2018 செப்டெம்பர் 30 இற்குள் முடிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அது முடிக்கப்படவில்லை. அதனால் இச்செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | ஹெட்டிபொல மைதான நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளது. தற்போது கணக்கீட்டுப்பதிவுகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர்/ செயற்திட்ட முகாமையாளர் / செயற்திட்ட ஆலோசகர் ஆகியோரிடமிருந்து தேவையான சான்றுப்படுத்தும் ஆவணங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஒப்பந்தகாரர்களிடமிருந்து தேவையான ஆவணங்களைப் பெறுவதில் கொவிட் 19 சூழ்நிலை காரணமாகத் தாமதமேற்பட்டது. | நிர்மாணப் பணிகளை முடிந்தளவு விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |